பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

15 08 2024 **THURSDAY** 7 15 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் நலனுக்கு மட்டுமே முன்னுரிமை அளித்து தமது அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. வளர்ச்சிக்கான இலக்குகளை எட்டுவதில் உள்ளாட்சி அமைப்புகள் முக்கிய பங்கு வகிப்பதாக பஞ்சாயத்துராஜ் துறை அமைச்சர் திரு. ராஜீவ்ரஞ்சன் சிங் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் முன்கூட்டியே விடுதலை கோரிய கைதிகளின் விண்ணப்பங்களை வரிசைப்படி பரிசீலிக்க நடவடிக்கை எடுக்குமாறு சென்னை உயர்நீதிமன்றம் சிறைத்துறை டிஜிபி-க்கு உத்தரவிட்டுள்ளது.

4. ஜப்பானில் **Ampil** சூறாவளி தொடர்ந்து வலுவடைந்து வருவதாக அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. ருமேனியா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manas Dhamne** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**>>>><<<<**

நாட்டின் நலனுக்கு மட்டுமே முன்னுரிமை அளித்து தமது அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நாட்டின் 78வது சுதந்திர தினத்தை ஒட்டி இன்று புதுதில்லியில், வரலாற்றுச் சிறப்புமிக்க செங்கோட்டையில் தேசியக்கொடியை ஏற்றிவைத்து அவர் உரையாற்றினார்.

சர்வதேச அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

மத்திய அரசு மேற்கொண்ட பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள், விரைவான வளர்ச்சியை உறுதி செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

சர்வதேச அளவில் பொருளாதாரத்தில் தேக்கநிலை காணப்பட்ட போதிலும், இந்தியாவைப் பொறுத்தவரை இது பொற்காலம் என்று அவர் கூறினார்.

நாட்டின் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அனைத்து துறைகளிலும் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் சேவையாற்றுவதே தமது அரசின் கடமையாகும் என்றும் அவர் கூறினார்.

ஊழல் முற்றிலும் அகற்றப்பட வேண்டும் என்பதில் தமது அரசு உறுதியுடன் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அனைத்து துறைகளிலும் தொழில்நுட்ப பயன்பாட்டை அதிகரிப்பதோடு, நவீனமயமாக்கல் பணிகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உலகின் மூன்றாவது மிகப்பெரிய பொருளாதார நாடாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்றும் அவர் கூறினார்.

வேளாண் துறையின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

செமிகண்டக்டர் உற்பத்தியில் உலகின் முன்னணி நாடாக இந்தியா திகழ வேண்டும் என்ற நோக்கில் தமது அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் விண்வெளித்துறை முக்கியப் பங்கு வகிப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் தமது அரசு உறுதியுடன் உள்ளதாக கூறிய பிரதமர், இதன் அடிப்படையில் பசுமைசார்ந்த வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்று தாம் விடுத்த அழைப்பிற்கு பொதுமக்கள் அதிக அளவில் ஆதரவு அளித்திருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் பிரதமர் கூறினார்.

வங்கித் துறையை வலுப்படுத்த பல்வேறு சீர்த்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

மகளிர் மேம்பாட்டிற்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களையும் பிரதமர் பட்டியலிட்டார்.

மதச்சார்பற்ற பொது சிவில் சட்டம் கொண்டுவரப்பட வேண்டியது அவசியமாகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

மக்களவைக்கும் மாநிலங்களின் சட்டப்பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

நாட்டிற்காக உயிர்த்தியாகம் செய்த ஒவ்வொருவருக்கும் நாம் கடன்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த ஐந்தாண்டுகளில் மருத்துவப் படிப்புகளுக்காக கூடுதலாக 75 ஆயிரம் இடங்கள் உருவாக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதனைத் தொடர்ந்து பிரதமர், பார்வையாளர்கள் பகுதிக்குச் சென்று அவர்களுடன் கலந்துரையாடினார்.

சுதந்திர தின கொண்டாட்டங்களில் மக்களின் பங்களிப்பு அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில், மத்திய அரசு அழைப்பு விடுத்த ஆறாயிரம் சிறப்பு அழைப்பாளர்கள் இவ்விழாவில் பங்கேற்றனர்.

தமிழகத்தைச் சேர்ந்த 21 பேர் சிறப்பு அழைப்பாளர்களாக இதில் கலந்து கொண்டனர்.

மாநிலங்களிலும் சுதந்திர தினம் உற்சாகமாக கொண்டாடப்பட்டது.

முதலமைச்சர்கள் தேசியக்கொடியை ஏற்றி வைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டனர்.

வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களிலும் சுதந்திர தினம் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

பல்வேறு நாடுகளின் தலைவர்களும், பிரதமர் திரு.நரேந்திர மோடிக்கு சுதந்திர தின வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

**>>>><<<<**

வளர்ச்சிக்கான இலக்குகளை எட்டுவதில் உள்ளாட்சி அமைப்புகள் முக்கிய பங்கு வகிப்பதாக பஞ்சாயத்துராஜ் துறை அமைச்சர் திரு. ராஜீவ்ரஞ்சன் சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த, உள்ளாட்சி அமைப்புகளின் பெண் பிரதிநிதிகளுக்கு பாராட்டு தெரிவிக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

உள்ளாட்சி நிர்வாகத்தில் நவீன தொழில்நுட்பங்களை, பெண் தலைவர்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அமைச்சர் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய இணையமைச்சர் திரு. எஸ்.பி. சிங் பாஹேல், நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அர்ப்பணிப்போடு பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**>>>><<<<**

பார்ஸி புத்தாண்டான நவ்ரோஸ் பண்டிகையை ஒட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக விடுத்துள்ள செய்தியில், இந்த பண்டிகை மகிழ்ச்சி, வெற்றி மற்றும் ஆரோக்கியத்தை கொண்டு வரட்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர், வரும் 18ஆம் தேதி குவைத் செல்கிறார்.

இருநாடுகளுக்கு இடையேயான உறவை வலுப்படுத்தும் நோக்கில் அவர் இப்பயணத்தை மேற்கொள்வதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த பயணத்தின் போது, குவைத் வெளியுறவு அமைச்சர் திரு. **Abdullah Ali Al – Yahiya-** வை சந்தித்து திரு. ஜெய்சங்கர் பேச்சு நடத்தவுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>><<<<

தமிழகம் முழுவதும் முன்கூட்டியே விடுதலை செய்யக்கோரி, கைதிகள் தரப்பில் அளிக்கப்பட்ட விண்ணப்பங்களை வரிசைப்படி பரிசீலிக்க நடவடிக்கை எடுக்குமாறு சிறைத்துறை டிஜிபி-க்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனுவை விசாரணை செய்த நீதிபதிகள், திரு. எஸ்.எம். சுப்பிரமணியம், திரு. சிவஞானம் அமர்வு, இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

இதுதொடர்பாக சிறை கண்காணிப்பாளர்களுக்கு உரிய சுற்றறிக்கை பிறப்பிக்குமாறும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>><<<<

ஜப்பானில் **Ampil** சூறாவளி தொடர்ந்து வலுவடைந்து வருவதாக அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இது, **Kando – Tohoku** இடையே நகரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, **Kando, Izu** தீவுகள் மற்றும் **Yamanashi** பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நிலச்சரிவு ஏற்படவும் வாய்ப்புள்ளதால், பொதுமக்கள் முன்னெச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

>>>><<<<

ருமேனியா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manas Dhamne** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 4-6, 7-5, 7-5 என்ற செட்கணக்கில் ருமேனியாவின் **Nicholes Lonel**–ஐ வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவிலும் **Manas Dhamne-Monaco-**வின் **Rocco Piatti** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>><<<<**

**Valencia** ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஸ்பெயினில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 6-1, 3-6, 6-2 என்ற செட்கணக்கில் ஸ்பெயினின் **Maria Martinez Vaquero-**வை வென்றார்.

**>>>><<<<**

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்றவர்களுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுதில்லியில் கலந்துரையாடினார்.

பிரதமர் இல்லத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் ஹாக்கி அணி வீரர்கள் மற்றும் துப்பாக்கிச் சுடும் போட்டியில் பதக்கம் வென்றவர்கள் பங்கேற்றனர்.

ஒலிம்பிக் போட்டியின் அனுபவம் குறித்து, அவர்களிடம் விரிவாக பிரதமர் கேட்டறிந்தார்.

இப்போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்ற அனைவருமே சாம்பியன் தான் என்றும் அவர் தெரிவித்தார்.

உயர்தர விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

**>>>><<<<**

ஒலிம்பிக் போட்டியில் வெற்றிபெற்றவர்களின் சாதனைகளை நினைவுகூரும் வகையில் சிறப்பு அஞ்சல் உறையை தமிழ்நாடு அஞ்சல் சரகம் வெளியிட்டுள்ளது.

**>>>><<<<**

**CARY** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

அமெரிக்காவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-4, 6-2 என்ற செட்கணக்கில் பிரான்ஸின் **Benjamin Bonzi – Harold Mayot** இணையை வென்றது.

**>>>>End<<<<**